செய்யாற்றின் குறுக்கே அணை.

*கு. க. வி. எண் 27— திரு. பி. எம். வெங்கடேசன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) செய்யாற்றின் குறுக்கே தச்சூர் அருகே அணைகட்டி கால்வாய் மூலம் சொழப்பலூர், பெரணமல்லூர் மற்றும் 50 கிராமங்களுக்கு நீர்ப்பாசன வசதி அளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். பி. வெங்கடேசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, செய்யாற்றின் குறுக்கே தச்சூர் அருகே அணைகட்டி கால்வாய் மூலம் சொழப்பலூர், பெரணமல்லூர் மற்றும் 50 கிராமங்களுக்கு நீர்ப்பாசனம் அளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா? ஆம் எனில், அதன்மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது; தலைவர் அவர்களே, அந்தக் கேள்விக்குத் தான் நான் பதில் சொன்னேன். செயற் குறிப்பு இல்லை, எனவே இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. எம். வெங்கடேசன்: தமிழகத்தில் வட ஆற்காடு மாவட்டத்தில், பெரணமல்லூர் தொகுதியில் சிறு விவசாயிகள் பாதிக்கப்படக் கூடிய நிலையிலே உள்ளார்கள். மேலும், இனியாவது தச்சூர் கால்வாயைக் கட்டிக்கொடுத்து, அங்குள்ள சிறு விவசாயிகளுக்குப் பாசன வசதி செய்துகொடுக்க வேண்டுமென்று மேலும் வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேட்க வேண்டும்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது; தலைவர் அவர்களே, ஏற்கனவே செய்யாற்றின் குறுக்கே தண்டரை அணைக்கட்டு கட்டப்பட்டு, செய்யாற்றின் உப நதியான கமண்டல நதி, நாக நதி, எஸ். வி. நகரம் வரை கட்டப்பட்டி

ருக்கிறது. இந்த அணைக்கட்டுகளுக்கு முறையாக நாம் நீர் வழங்கி, அதன் மூலம் அங்குள்ள கண்மாய்களை நிரப்பி, அதற்குப் பிறகு ஏதாவது உபரி நீர் இருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்தக் கோரிக்கையை அரசு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும். எனவே, ஓராண்டு காலம் அவர்கள் பொறுத்திருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன்: பேரவைத் தலைவர் அவர்களே, செய்யாறு அணைக்கட்டில் ஏற்கனவே கட்டப்பட்டுள்ள தண்டரை அணைக்கட்டை விருத்தி செய்வதற்கு அமைச்சர் அவர்கள் ஏதாவது ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, தண்டரை அணைக்கட்டின் இடதுபுற வாய்க்கால் பாசன வசதி பெற்று வருகிறது. வலதுபுற வாய்க்கால் இன்னும் நிறைவேறவில்லை. அதை உடனடியாக நிறை வேற்றிய பிறகுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய இன்னொரு திட்டத்தைப் பற்றி யோசிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, செய்யாற்றி னுடைய கிளை வாய்க்காலிலே இருந்து பாசன வசதி செய்து தரவேண்டுமென்று கோரிக்கைகள் ஏதேனும் அந்த மாவட்டத் திலே இருந்து இந்த அரசுக்கு வந்திருக்கிறதா? அதுமாதிரி வந்திருந்தால், அதன் பேரிலே என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது என்பதை விவரமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, தச்சூர் அருகே அணை கட்டவேண்டும் என்று அரசுக்கு வந்திருக்கிறது. ஏற்கனவே தண்டரை அணை கட்டப்பட்டு, அதற்குப் பிறகு எஸ். வி. நகரம் அருகே கட்டப் பட இருக்கிறது. அதையெல்லாம் முடித்த பிறகு அடுத்த கோரிக்கையாக தச்சூர் கால்வாய் தேவைப்பட்டால், அரசு மறு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன,

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]